கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 226/2019

இ.ம.எண்.7/2024

மனுதாரர் தரப்பு சாட்சி – 1 துரைசாமி திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 06.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. எனது சொத்திற்கு எந்த திசையில் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் கீழ் புறம் உள்ளது. எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் உள்ள அவர்களது அனுபவத்தை நான் இடையூறு செய்யக்கூடாது என்று அசல் வழக்கு எண்.20/2024 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 17.01.2024 ம் தேதி எத்தனை மணிக்கு பிரச்சனை ஏற்பட்டது என்று மனுவிலோ அல்லது வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

2. மேற்படி பிரச்சனை ஏற்பட்டது என்றும், அந்த சமயத்தில் குறிப்பிட்ட நபர்கள் இருந்தார்கள் என்றும் எனது மனுவிலோ, எனது வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில்எந்த தேதியில் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க முயற்சித்தாக சொல்லப்பட்டுள்ளது என்றால் 18.01.2020 ஆகும். மேற்படி புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் 17.01.2024 ம் தேதி நான் மனுவிலும், வாக்குமூலத்திலும் சொல்லியவாறு பிரச்சனை நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

3. எனது வாக்குமூலத்தில் நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இ.ம.எண்.829/2019 ல் எனக்கு வழங்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவை எனக்கு ஆதரவாக பயன்படுத்தி மேற்படி உத்தரவை நான் தான் மீறியுள்ளதால் தான் அசல் வழக்கு எண். 20/2024 வழக்கை எதிர்மனுதாரர்கள் எனக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்கள்

என்றால் சரியல்ல. நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவை பயன்படுத்தி கொண்டு எதிர்மனுதாரர்களுக்கு வேண்டுமென்றே தொல்லை கொடுக்கும் நோக்கத்தில் பொய்யான விவரங்கள் கண்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai**